முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

OS. No. 30/2020

நாள் : 30.07.2026

DW1 : கஸ்தூரி, க/பெ. ரவிச்சந்திரன்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> : (பிரதிவாதி தரப்பில் 1ம் சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் தொடர்ச்சியாக குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 காலக்கெடு நீட்டிப்பு பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் கஸ்தூரி என்று கையொப்பம் செய்திருப்பது என்னுடைய கையொப்பம் தான். வா.சா.ஆ.2 பத்திரம் முறையாக பதிவு செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்திருக்கும் ரவிச்சந்திரன் எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நல்ல உடல் நிலையில் உள்ளார் என்றால் இல்லை, அவர் உடல்நிலை சரியில்லாமல் உள்ளார் அவருக்கு விபத்து ஏற்பட்டு கை கால்கள், கண் பார்வை சரியில்லாமலும் உள்ளார். எனது கணவர் படுத்த படுக்கையாக இல்லை என்றால் சரிதான், அவர் நல்லது கெட்டது விசேஷங்கள் ஆகியவற்றிற்கு போய் வருகிறார் என்றால் யாராவது துணையுடன் போய் வருவார். எங்களுக்கு சொந்தமான பூமியின் விவசாயம் அவர் பார்த்து வருகிறார் என்றால் நானும் எனது கணவரும் சேர்ந்து பார்த்து வருகிறோம். வா.சா.ஆ.2 ஆவணம் எப்போது எழுதப்பட்டது என்று தேதி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வாதி தரப்பில் யார் யார் சாட்சிகள் விசாரித்துள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு வந்த பிற்பாடு யார் யார் சாட்சிகளை விசாரித்தார்கள் என்று நான் தெரிந்து கொண்டேன். விஸ்வநாதன் மனைவியை விசாரித்தார்கள் அவர் பெயர் தெரியாது. புரோக்கர் மாது என்பவரை விசாரித்தார்கள். நான் இந்த வழக்கிற்காக வேண்டி நீதிமன்றத்திற்கு சாட்சிகள் விசாரணையின் போது இருந்ததால் நான் வாதிகள் தரப்பில் யார் யார் சாட்சிகள் விசாரித்தார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டேன். எனக்கு இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் யார் யாரை விசாரித்தார்கள் என்று எதுவும் தெரியாது என்றாலும் அதனால் தான் எனது நிரூபன வாக்குமூலத்தில் பத்தி 27 முதல் 31 வரையிலான பத்திகளில் சொல்லப்பட்டவை பற்றி எனக்கு தெரியாது என்று சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக தாவா சொத்தை கிரயம் செய்து கொடுப்பதற்கு வழக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த வழக்கறிவிப்பை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கறிவிப்பிற்கு நான் பதில் கொடுக்கவில்லை என்றால் சரிதான், நான் இது சம்பந்தமாக எங்க ஊர் தலைவர் முருகேசனை சென்று பார்த்தேன் அவர் என்னிடம் காவல் நிலையம் செல்ல அறிவுறுத்தினார். நான் ரங்கம் பாளையம் காவல் நிலையத்திற்கு சென்றேன் அங்கு இது சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தை அணுக சொன்னார்கள். காவல் நிலையத்தில் என்னை அறிவுறுத்தியது போல் சிவில் வழக்கோ அல்லது மோசடிக்கான குற்றவியல் வழக்கோ தாக்கல்

SAMEENA S Digitally signed by SAMEENA S Date: 2026.07.30 17:44:17 +0530

செய்தேனா என்றால் வழக்கறிஞரை அணுகி கருத்து பெற்றேன். வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் அதை வைத்து மோசடியாக வழக்கு தாக்கல் செய்யக்கூடாது என்றும் மேற்படி ஆவணங்களை ரத்து செய்து கொடுக்க வேண்டும் என்று கோரியும் வாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் கடன் எவ்வளவு வாங்கி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் ரூபாய் 5 லட்சம் கடன் வாங்கியுள்ளதாக சொல்லி உள்ளேன். வட்டி செலுத்தியதற்கான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை, மாதா மாதம் சரியாக ரூபாய் 15,000 வட்டி செலுத்தி விடுவேன். நான் சொல்வது போல் இந்த வழக்கில் நான் ஐந்து லட்சம் ரூபாய் ஏதும் கடனாக வாங்கவில்லை என்றாலும் அதற்கு வட்டி ஏதும் நான் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் தான் வட்டி செலுத்தியதற்கான ஆவணம் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்தை விற்பனை செய்வதற்கு தான் வா.சா.ஆ. 1 மற்றும் 2 ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, வாதி ஏமாற்றி எழுதி வாங்கிவிட்டார். வா.சா.ஆ. 1, 2 ஆவணம் நான் தாவா சொத்தை விற்பனை செய்வதற்காக ஏற்படுத்தி கொடுத்ததால் தான் வாதிக்கு எதிராக மோசடி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வா.சா.ஆ. 1, 2 ஆவணத்தின் அடிப்படையில் கிரய பத்திரம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 1 உண்மையான ஆவணம் என்பதால் தான் அதில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ள எனது கணவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.07.30 17:44:28 +0530

Principal District and Sessions Judge,

Erode.